# திரிகடுகம்

**61. ஐயறிவும் தம்மை அடைய ஒழுகுதல்**
**எய்துவ தெய்தாமை முற்காத்தல் - வைகலும்**
**மாறேற்கும் மன்னர் நிலையறிதல் இம்மூன்றும்**
**சீரேற்ற பேரமைச்சர் கோள்.**

**(இ-ள்.)** ஐஅறிவும் - ஐம்பொறிகளின் அறிவும், தம்மை அடைய - (தீயவழியில் செல்லாது) தம்மிடத்து அடங்கி நிற்கும்படி, ஒழுகுதல் - நடத்தலும்; எய்துவது அரசனுக்கு வருவதாகிய தீங்கை, எய்தாமை - வராதபடி, முன்காத்தல் - முன் அறிந்து தடுத்தலும்; வைகலும் - நாடோறும், மாறு - (தம்முடைய) பகைமையை, ஏற்கும் - ஏற்றுக்கொள்ளுதற்குரிய, மன்னர் நிலை - அரசருடைய இருப்பை, அறிதல் - ஒற்றர்களால் அறிந்து அதற்குத் தக்கபடி செய்தல்; இ மூன்றும் - ஆகிய இந்த மூன்றும், சீர் ஏற்ற - புகழை மேற்கொண்ட, பேர் அமைச்சர் - பெருமையாகிய அமைச்சர்களின், கோள் துணிவுகளாம்; (எ-று.)

**(க-ரை.)** பேரமைச்சர்கள் ஐம்பொறிகளை அடக்கி நடத்தவும், அரசனுக்குத் தீங்கு வராமல் காக்கவும், பகைவருடைய நிலைமையை அறிந்து நடக்கவும் வல்லவர்களாயிருக்க வேண்டும்.

ஐம்பொறிகள் - மெய், வாய், கண், மூக்கு, செவி, எய்துவது : எய்து என்னும் வினையினடியாகப் பிறந்த எதிர்கால வினையாலணையும் பெயர், மாறு : முதனிலைத் தொழிற் பெயர். நிலை : தொழிற்பெயர்.(61)

**62. நன்றிப் பயன் தூக்கா நாணிலியும் சான்றோர்முன்**
**மன்றில் கொடும்பா டுரைப்பானும் - நன்றின்றி**
**வைத்த அடைக்கலங் கொள்வானும் இம்மூவர்**
**எச்சம் இழந்துவாழ் வார்.**

**(இ-ள்.)** நன்றிப்பயன் - ஒருவன் தனக்குச் செய்த நன்றியின் பயனை, தூக்கா - அளந்தறியாத, நாண் இலியும் - நாணமில்லாதவனும்; சான்றோர் முன் - பெரியவர் முன்னே, மன்றில், அறநிலையத்தில், கொடும்பாடு - பொய்ச் சொல்லை, உரைப்பானும் - சொல்லுகின்றவனும்; நன்று இன்றி - நற்செய்கை இல்லாதவனாய், வைத்த - ஒருவன் வைத்த, அடைக்கலம் - அடைக்கலப் பொருளை, கொள்வானும் - கைப்பற்றிக் கொள்பவனும்; இ மூவர் - ஆகிய இந்த மூவரும், எச்சம் இழந்து - தம் மக்களை இழந்து வருந்தி, வாழ்வார் - உயிர் வாழ்வார்; (எ-று.)

**(க-ரை.)** நன்றி மறந்த நாணிலியும், மன்றிற் பொய்ச் சாட்சி புகன்றவனும், அடைக்கலப் பொருளை வெளவியவனும் மக்கட்பேறற்று வருந்துவர் என்பது.

கொடும்பாடு : பண்புத்தொகை. கொடுமை - வளைவு. எச்சம் - எஞ்சுவது : தொழிற்பெயர்; ஒருவன் இறந்தபின் மிகுந்து நிற்பது மக்களும் புகழும் ஆதலால் இரண்டும் கூறலாம். நாணிலி என்பதில் இகரம் ஆண்பாலை யுணர்த்தியது வாழ்வார் : வாழார் என உடன் பாட்டில் வந்த எதிர்மறை. அடைக்கலம் : பண்பாகுபெயர்.(62)

**63. நோவஞ்சா தாரோடு நட்பும் விருந்தஞ்சும்**
**ஈர்வளையை யில்லத் திருத்தலும் - சீர்பயவாத்**
**தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்**
**நன்மை பயத்த லில.**

**(இ-ள்.)** நோ - (தமக்கு வரும்) துன்பத்துக்கு, அஞ்சாதாரோடு - பயப்படாதவரிடத்து, நட்பும் - கொண்ட நட்பும்; விருந்து அஞ்சும் - விருந்தினர்க்கு உண்டி கொடுக்க அஞ்சுகின்ற, ஈர்வளையை - மனைவியை, இல்லத்து - மனையினிடத்தில், இருத்தலும் - இருக்கச் செய்தலும் : சீர்பயவா - சிறப்பைத் தராத, தன்மை - தன்மையையுடைய, இல் ஆளர் - இல்வாழ்வோருக்கு, அயல் இருப்பும் - அயலில் குடியிருத்தலும்; இ மூன்றும் - ஆகிய இம் மூன்றும், நன்மை - நன்மையை, பயத்தல் இல - தருதலில் லனவாம்; (எ-று.)

**(க-ரை.)** வருந் துன்பத்துக்கு அஞ்சா நண்பரின் நட்பும் விருந்தோம்பாத மனைவியோடிருப்பும், நற்குணமில்லாதவர் அயலிற் குடியிருப்பும் பயனற்வை என்பது.

நோ : முதனிலை திரிந்த தொழிற்பெயர். ஈர்வளை : பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; பைந்தொடி என்னும் பொருளது. ஈர் : வினைத்தொகையாயின் அறுக்கப்பட்ட என்னும் பொருட்டு. வளை : பண்பாகு பெயர்.(63)

**64. நல்விருந் தோம்பலின் நட்டாளாம் வைகலும்**
**இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்**
**மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்**
**கற்புடையாள் பூண்ட கடன்.**

**(இ-ள்.)** நல் விருந்து - நன்மையான விருந்தினரை, ஓம்பலின் - பாதுகாத்தலால், நட்டாள் ஆம் - கணவனுக்கு நட்பினளாம்; வைகலும் - நாடோறும், இல் - இல்லறத்தை, புறஞ் செய்தலின்

(வழுவாது) காத்தலால், ஈன்ற தாய் (ஆம்) - பெற்ற தாயாம்; தொல்குடியின் - தன் பழைய குடும்பத்துக்குரிய, மக்கள் பெறலின் - மக்களைப் பெறுதலால், மனைக்கிழத்தி (ஆம்) - மனையாளாம்; இ மூன்றும் - (விருந்தோம்பல் முதலிய) இம் மூன்று செயலும், கற்பு உடையாள் - கற்புடைய பெண், பூண்ட மேற்கொண்ட, கடன் - கடமைகளாம்; (எ-று.)

**(க-ரை.)** விருந்தோம்பல், மனையறம் போற்றல், மக்கட் பெறுதல் இவற்றைச் செய்யும் பெண்ணே கற்புடைய பெண் என்பது.

மனைக்கிழத்தி - மனைவி. கிழத்தி - கிழமையுடையவள். புறஞ் செய்தல் என்பதில் புறஞ்செய் ஒரு சொல். விருந்தினர்க்கு நன்மையாவது, இல்வாழ்வானால் இயன்றவளவு தந்த உண்டி முதலியவற்யை ஏற்று மகிழ்தல். ஆம் என்பதனை, தாய், கிழத்தி என்பவற்றோடுங் கூட்டுக. தொன்மை குடி - தொல் குடி. தொன்மை - பழைமை, அஃதாவது தொன்று தொட்டு வருவது.(64)

**65. அச்சம் அலைகடலின் தோன்றலும் ஆர்வுற்ற**
**விட்டகல் கில்லாத வேட்கையும் - கட்டிய**
**மெயந்நிலை காணா வெகுளியும் இம்மூன்றும்**
**தந்நெய்யில் தாம்பொரியு மாறு.**

**(இ-ள்.)** அலைகடலின் அலைகின்ற - கடலைப்போல், அச்சம் தோன்றலும்; மாறி - மாறிப் பெரும் பயம் (ஒருவர் உள்ளத்தில்) தொன்றுதலும்; ஆர்வு உற்ற - அனுபவித்தவற்றை, விட்டு அகல கில்லாத - விட்டு நீங்கமாட்டாத, வேட்கையும் - விருப்பமும்; கட்டிய - (அறிவுடையோரால்) யாக்கப்பட்ட செய்யுள்களின், மெயந்நிலை - பொருளின் உண்மை நிலையை, காணா வெகுளியும் - அறியாத சினமும்; இ மூன்றும் - ஆகிய இந்த மூன்றும்; தம் நெய்யில் - (ஆடு முதலானவை) தம்மிடத்துப் பிறந்த நெய்யிலே, தாம் பொரியும் ஆறு - தாம் பொரிகின்ற வகை போல எவரிடத்துப் பிறந்தனவோ அவரைத் தம்மில் வேவச் செய்வனவாம்; (எ-று.)

**(க-ரை.)** நெஞ்சில் எஞ்சா அச்சமும், நீக்க மாட்டாத வேட்கையும், உண்மை யுணராமையா லுண்டாகும் சினமும் ஒருவனுக்கு மிகுந்த வருத்தத்தைச் செய்வனவாம்.

அலைகடல் : வினைத்தொகை. கடலின் : இன் : ஐந்தனுருபு, ஒப்புப் பொருள், ஆர்வு : தொழிலாகுபெயர். கட்டிய மெய்ந்நிலை என்பதற்குப் பெரியோரால் உறுதியாகத் தழுவப்பட்ட மெய்யினது நிலை எனினுமாம். ஆடு முதலானவை : இசையெச்சம். அகலகில்லாத : இதில் கில் ஆற்றலுணர்த்தும் இடைநிலை.

**66. கொழுநனை இல்லாள் கறையும் வழிநிற்கும்**
**சிற்றாளில் லாதான்கைம் மோதிரமும் - பற்றிய**
**கோல்கோடி வாழும் அரசனும் இம்மூன்றும்**
**சால்போடு பட்ட தில.**

**(இ-ள்.)** கொழுநனை - கணவனை, இல்லாள் - இல்லாதவளது. கறையும் - மாதவிடாயும்; வழிநிற்கும் - தன் ஏவலின் வழியில் நிற்கின்ற, சிறு ஆள் - சிற்றளை, இல்லாதான் - இல்லாதவனுடைய, கை மோதிரம் - கைவிரல் அணிந்த மோதிரமும், பற்றிய - தான் மேற்கொண்ட, கோல் - ஆளும் முறை, கோடி - தப்பி, வாழும் அரசனும் - வாழ்கின்ற அரசனும்; இ மூன்றும் - ஆகிய இம் மூன்றும்; சால்போடு - நிறையோடு, பட்டது இல - பொருந்திய சிறப்புடையன அல்லவாம்; (எ-று.)

**(க-ரை.)** புருடன் இல்லாதவள் பூப்பும் சிற்றாளில்லான் செங்கையாழியும், கொடுங்கோல் அரசும் சிறப்பற்றவை என்பது.

கொழுநன் - மனையாளுக்கு உறுதியாகிய துணையாயுள்ளவன். கறை - கறுப்பு, கோடு : முதனிலை; இகரம் வினையெச்ச விகுதி, சால்பு - நிறைவு; அஃதாவது அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையாகிய ஐந்து நற்குணங்களும் நிறைந்தது.

கொழுநனையில்லாள் நலனும் பாடங்கொள்ளின், நலன் என்பது அழகாம்.(66)

**67. எதிர்நிற்கும் பெண்ணும் இயல்பியல் தொழும்பும்**
**செயிர்நிற்குஞ் சுற்றமும் ஆகி - மயிர்நரைப்ப**
**முந்தைப் பழவினையாய்த் தின்னும் இவைமூன்றும்**
**நொந்தார் செயக்கிடந்த தில்.**

**(இ-ள்.)** எதிர் நிற்கும் - (தாம் சினந்தால்) தம் எதிர்நின்று பேசும்; பெண்ணும் - மனையாளும்; இயல்பு இல் - ஒழுக்கமில்லாத, தொழும்பும் - ஏவலாளும்; செயிர் - பகை, நிற்கும் - கெடாது நிற்கும், சுற்றமும் - உறவினரும், ஆகி - ஆய் நின்று. முந்தை - முற்பிறப்பிற் செய்த, பழவினை - பழைய வினை, ஆய் - ஆகும்படி, மயிர்நரைப்ப - முதுமைப் பருவம் வரைக்கும், தின்னும் - மெலியச் செய்யும்; இவை மூன்றும் - இந்த மூன்றுக்கும், நொந்தார் - வருந்தினார், செயக் கிடந்தது - செய்யக்கூடியதாகிய, பரிகாரம் இல் - இல்லை; (எ-று.)

**(க-ரை.)** கணவனை எதிர்த்து நிற்கும் மனைவியும் நன்னடக்கையில்லா அடிமையும், பகை பாராட்டும் உறவினரும் பழவினைப் பயன்போற் பரிகரிக்கப்படாதவர் என்பது.

தொழும்பு : தொழிலாகு பெயர், செயிர் : குற்றம்; ஈண்டுப் பகை. மயிர் நரைப்ப என்பது முதுமைப் பருவத்தை யுணர்த்த வந்த குறிப்புச் சொல்.(67)

**68. இல்லார்க்கொன் றீயும் உடைமையும் இவ்வுலகில்**
**நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் - எவ்வுயிர்க்கும்**
**துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்**
**நன்றறியும் மாந்தர்க் குள.**

**(இ-ள்.)** இல்லார்க்கு - வறியவர்க்கு, ஒன்று ஒருபொருளை ஈயும் - கொடுக்கும், உடைமையும் - செல்வமும்; இவ்வுலகில் - இவ்வுலகத்தின் பொருள்களின், நில்லாமை - நிலையாமையை, உள்ளும் ஆராய்ந்து அறியும், நெறிப்பாடும் - வழியில் பொருந்துதலும்; எவ்வுயிர்க்கும் - எல்லா வுயிர்க்கும், துன்பு உறுவ - துன்பம் அடைவதற்கு ஏதுவாகிய செய்கைகளை, செய்யாத தூய்மையும் - செய்யாத தூய தன்மையும்; இ மூன்றும் - ஆகிய இம் மூன்றும், நன்று - அறத்தை, அறியும் - அறியக்கூடிய மாந்தர்க் மக்கட்கு, உள - உண்டு; (எ-று.)

**(க-ரை.)** வறியோரைக் காக்கும் செல்வமும், பொருள்களின் நிலையாமையை யறிந்து நடக்குந் தன்மையும் எவ்வுயிர்க்கும் இன்பம் அளிக்கும் செம்மையும் அறமுணர்ந்தவர்களிடத்திலேயே உண்டு என்பது.

ஒன்று - எண்ணல் அளவையாகு பெயர். உடைமை : பண்பாகு பெயர். உலகு : இடவாகு பெயர். நில்லாமை . நிலையாமை, நில்லாதவற்றை நிலையின வென்றுணர்வது புல்லறிவாண்மை எனப்படும். உருவ : பலவின்பால் வினையாலணையும் பெயர்.(68)

**69. அருந்தொழில் ஆற்றும் பகடும் திருந்திய**
**மெய்ந்நிறைந்து நீடிருந்த கன்னியும் - நொந்து**
**நெறிமாறி வந்த விருந்துமிம் மூன்றும்**
**பெறுமா றரிய பொருள்.**

**(இ-ள்.)** அரும்தொழில் - (உழுதல் பெருஞ்சுமை தாங்குதல் முதலிய) அரிய தொழிலை, ஆற்றும் பகடும் - செய்யவல்ல கடாவும், திருந்திய - குற்றமற்ற, மெய்நிறைந்து - உடலிலக்கணம் நிரம்பி, நீடு இருந்த - நெடுநாள் (மணமின்றி) இருந்த, கன்னியும் - இளம் பெண்ணும்; நெறிமாறி - வழிதப்பி,

நொந்து வந்த பசித்துவந்த, விருந்தும் - விருந்தினரும்; இ மூன்றும் - ஆகிய இம்மூன்றும், பெறும் ஆறு - பெறுகின்ற வழியில், அரிய பொருள் - அரிய பொருள்களாம்; (எ-று.)

**(க-ரை.)** நிலத்தையுழவல்ல பாரம் சுமக்கும் எருதும், உடலுறுப்பிலக்கணம் அமைந்த கன்னியும், வழிதப்பிப் பசித்து வருந்தும் விருந்தும் கிடைத்தற்கரிய பொருள் என்பது.

மெய் - மெய்யின் இயல் : பொருளாகுபெயராய்த் தன் இலக்கணத்தை யுணர்த்திற்று. வந்த : இடவழுவமைதி. உயர் திணையாகிய கன்னி மிகுதி பற்றி மூன்றும் என்னும் அஃறிணை முடிபேற்றது.(69)

**70. காவோ டறக்குளந் தொட்டானும் நாவினால்**
**வேதம் கரைகண்ட பார்ப்பானும் - தீதிகந்**
**தொல்வதுபாத் துண்ணும் ஒருவனும் இம்மூவர்**
**செல்வ ரெனப்படு வார்.**

**(இ-ள்.)** காவோடு - சோலையை உண்டாக்குதலுடன், அறக்குளம் - அறத்துக்குரிய குளத்தை, தொட்டானும் - தோண்டுவித்தவனும்; நாவினால் - நாவினால் ஓதி, வேதம் - வேதத்தை, கரை கண்ட - முடிவுகண்ட, பார்ப்பானும் - அந்தணனும்; தீது - தீய வழியை, இகந்து - கடந்து, ஒல்வது - (தனக்கு) இசையும் பொருளை, பாத்து - பகுத்து, உண்ணும் - உண்கின்ற, ஒருவனும் - ஒப்பற்ற இல்லறத்தானும்; இ மூவர் - ஆகிய இம் மூவரும், செல்வர் எனப்படுவார் - செல்வத்தையுடையா ரென்று கருதப்படுவார்; (எ-று.)

**(க-ரை.)** தோப்பும் குளமும் அமைத்தவனும் மறைநூலோதி யுணர்ந்தவனும், பிறர்க்குப் பகுத்துக் கொடுத்துண்ணும் இல் வாழ்வானும் உண்மைச் செல்வராவர் என்பது.

காவோடு குளந்தொட்டான் என்பதில் மூன்றனுருபு வேறு வினை உடனிநிகழ்ச்சியாதலால், கா என்றதற் கேற்ப உண்டாக்குதல் என்னுந் தொழில் வருவிக்கப்பட்டது. கரை கண்ட என்பது ஒரு சொல்லின் தன்மையது.(70)

**71. உடுத்தாடை யில்லாதார் நீராட்டும் பெண்டிர்**
**தொடுத்தாண் டவைப்போர் புகலும் - கொடுத்தளிக்கும்**
**ஆண்மை யுடையவர் நல்குரவும் இம்மூன்றும்**
**காண அரியவென் கண்.**

**(இ-ள்.)** உடுத்த ஆடை - உடுக்கப்பட்ட ஆடை, இல்லாதார் - இல்லாதவர், நீர் ஆட்டும் - நீராடுதலும்; பெண்டிர் பெண்கள், தொடுத்து - (பிறரோடு) வழக்குத் தொடுத்து, ஆண்டு - அங்குள்ள, அவை - சபைகளிடத்தில், போர் புகலும் - போர்க்குப் புகுதலும்; கொடுத்து - பிறர்க்குக் கொடுத்து, அளிக்கும் காக்கின்ற; ஆண்மை யுடையவர் - ஆண் தன்மையுடையவரது, நல்குரவும் - வறுமையும், இ மூன்றும் - ஆகிய இந்த மூன்றும், என் கண் - என் கண்கள், காண அரிய - பார்க்கத் தகுவன வல்லவாம்; (எ-று.)

**(க-ரை.)** ஆடையின்றி நீரில் இறங்கிக்குளிப்பதும், பெண்கள் வழக்குத் தொடுத்து மன்றேறுதலும், கொடையாளர்கள் வறுமை யுறலும் காணக்கூடிய வல்ல என்பது.உடுத்தாடை என்பதில் உடுத்த என்ற பெயரெச்சத்து ஈறு தொகுத்தல். ஆட்டு : பிறவினை முதனிலைத் தொழிற்பெயர். நல்குரவு என்ற தொழிற் பெயரில் நல்கூர் முதனிலை. "உடுத்தலால் நீராடார், ஒன்றுடுத் துண்ணார், உடுத்தாடை நீருட் பிழியார் - விழுத்தக்கார், ஒன்றுடுத்தென்றும் அவைபுகார் என்பதே, முந்தையோர் கண்ட முறை" என்ற ஆசாரக்கோவை யடிகளும் காண்க. (71)

**72. நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்**
**அறனை நினைப்பானை அல்பொருள் அஞ்சும்**
**மறவனை யெவ்வுயிரும் அஞ்சுமிம் மூன்றும்**
**திறவதில் தீர்ந்த பொருள்.**

**(இ-ள்.)** நிறை - புலன்கள்மேற் போகாமல் நிறுத்தப்படும், நெஞ்சு உடையானை - நெஞ்சுடையவனுக்கு, நல்குரவு அஞ்சும் - வறுமை பயப்படும்; அறனை - அறத்தையே, நினைப்பானை - நினைக்கின்றவனுக்கு, அல்பொருள் - பாவம், அஞ்சும் - பயப்படும்; மறவனை - கொலையாளிக்கு, எவ்வுயிரும் - எல்லா உயிர்களும், அஞ்சும் - பயப்படு; இ மூன்றும் - ஆகிய இந்த மூன்றும் திறவதில் - வன்மைகளுள், தீர்ந்த பொருள் - சிறப்பாக முடிந்த பொருள்களாம்; (எ-று.)

**(க-ரை.)** வறுமை நிறைநெஞ்சுடையானைச் சேரவும், மறம் அறநினைப்பாளனை யணுகவும், எவ்வுயிரும் கொலையாளியைக் காணவும் அஞ்சும் என்பது.

நிறை நிறுத்தல், தொழிற்பெயர். முன்னர் அறம் என்றமையால் அல்பொருள், பாவம் அல்லது மறம் எனப்பட்டது. திறவது : பண்புப் பெயர். திறவதிற் றீர்ந்த பொருள் என்பதற்கு வேறுபாட்டில் நீங்கித் தம்முட் சிறந்த பொருளுள்களாம் என்றும் பொருள் கூறலாம்.(72)

73. **இரந்துகொண் டொண்பொருள் செய்வலென் பானும்**
**பரந்தொழுகும் பெண்பாலைப் பாசமென் பானும்**
**விரிகட லூடுசெல் வானுமிம் மூவர்**
**அரிய துணிந்துவாழ் வார்.**

**(இ-ள்.)** இரந்துகொண்டு - (இல்லாமையால் பிறரிடம்) கெஞ்சிப் பெற்று, ஒண்பொருள் - ஒள்ளிய பொருளை, செய்வல் என்பானும் - ஈட்டுவன் என்று கூறும் இரப்போனும்; பரந்து - (பலரிடத்தும்) சென்று, ஒழுகும் நடக்கின்ற, பெண்பாலை - பெண்வகுப்பைச் சேர்ந்த வேசையை,பாசம் என்பானும்அன்புடையாளெனக் கருதும் காமுகனும் : விரி கடல் ஊடு - பரந்த கடலினடுவில், செல்வானும் - (தக்க கருவியின்றி) பொருளீட்டச் செல்லும் வாணிகனும்; இ மூவர் - ஆகிய இம் மூவரும், அரிய - செய்வதற்கு அரிய பொருள்களை, துணிந்து - பின் வாங்கலின்றி மேற்கொண்டு, வாழ்வார் - வாழ்பவர் போலத் தாழ்பவராவார்; (எ-று.)

**(க-ரை.)** பிச்சையெடுத்துப் பெரும்பொருள் ஈட்டுதலும், வேசை தன்னிடம் மெய்யன்புடையவளென்று நம்புதலும், வேண்டிய கருவிகளில்லாமல் திரைகடலோடித் திரவியந் தேட முயலுதலும் முடியாத செயல் என்பது.

ஒண்பொருள் - ஒருவனைப் பலருள்ளும் ஒண்மையுடையவனாகச் செய்யவல்ல செல்வம்; செய்வல் : அல் ஈற்றுத் தன்மையொருமை எதிர்கால வினைமுற்று. பரந்தொழுகுதலாவது - உள்ளம் ஒருவனைப் பற்றி நில்லாது பொருள்வளம் மிக்க பலரிடத்தும் செல்லுதல். பாசம் - பற்று; பண்பாகுபெயர். கடலூடு : ஊடு : ஏழனுருபு.(73)

74. **கொலைநின்று தின்றொழுகு வானும் பெரியவர்**
**புல்லுங்கால் தான்புல்லும் பேதையும் - இல்லெனக்கொன்**
**றீகென் பவனை நகுவானும் இம்மூவர்**
**யாதுங் கடைப்பிடியா தார்.**

**(இ-ள்.)** கொலைநின்று - கொல்லுந் தொழிலில் நீங்காது நிலைபெற்று, தின்று ஒழுகுவானும் - (ஓருயிரை வதைத்து) அதன் இறைச்சியைத் தின்பவனும்; பெரியவர் - பெரியோர், புல்லுங்கால் - தன்னைத் தழுவும்போது, தான் புல்லும் - (அவரோடொப் பவனாகத் தன்னை மதித்துத்) தானும் அவரை எதிர் தழுவுகின்ற, பேதையும் - அறிவில்லாதவனும்; எனக்கு இல் - எனக்கு இல்லை, ஒன்றுஈக - ஒன்றை (ஒரு பொருளை) ஈயக் கடவாய், என்பவனை - என்று இரக்கின்றவனை,

நகுவானும் - இகழ்வானும்; இ மூவர் - (ஆகிய) இம் மூவரும், யாதும் - யாதோர் அறத்தையும், கடைப்பிடியாதார் - உறுதியாகக் கொள்ளாதவராவர்; (எ-று.)

**(க-ரை.)** கொலைசெய் துண்பதும், பெரியோர் தழுவினால் அவர்க்கு வணக்கஞ் செய்யாது தானும் அவரைத் தழுவுவதும் இல்லை என்று இரப்பவனைப் பார்த்து இகழ்தலும் நல்லொழுக்கத்தை மேற் கொள்ளாதவர் செயல்களாம்.

ஈக எனப்படுவது தொகுத்தல் விகாரம் பெற்றது.(74)

75. **வள்ளன்மை பூண்டான்கண் செல்வமும் உள்ளத்**
**துணர்வுடையா னோதிய நூலும் - புணர்வின்கண்**
**தக்க தறியுந் தலைமகனும் இம்மூவர்**
**பொத்தின்றிக் காழ்த்த மரம்.**

**(இ-ள்.)** வள்ளன்மை - வரையாது கொடுத்தலை, பூண்டான்கண் - அணியாக மேற்கொண்டவனிடத்துள்ள, செல்வமும் - பொருளும்; உள்ளத்து - உள்ளத்தில், உணர்வு உடையான் - (கேட்டதனை) நினைத்துப் பார்க்கும் இயல்புடையவன், ஓதிய நூலும் - கற்ற நூற்புலமையும்; புணர்வின்கண் - (பிறர் தன்னைச்) சார்ந்தவிடத்து, தக்கது - (அவர்க்குச் செய்யத்) தக்க காரியத்தை, அறியும் தலைமகனும் - அறியும் தலைவனும்; இ மூவர் ஆகிய இம் மூவரும், பொத்துஇன்றி - பொந்தில்லாமல், காழ்த்த - வயிரம் பற்றிய, மரம் - மரம் போல அசைவற்றவராவர். (எ-று.)

**(க-ரை.)** கொடையாளனிடத்துற்ற செல்வமும், அறிவொடு கற்ற அறநூலும், தன்னை யடுத்தவர்க்குச் செய்யத்தக்கதைத் தெரிந்தவனும் உறுதியான பொருள்கள் என்பது.

வள்ளன்மை : பண்புப் பெயர்; 'வள்' முதனிலை; 'ள்' : சந்தி. நூல் : காரண வாகு பெயர். செல்வமும் நூலும் தலைமகனும் எனத் திணைவிரவிச் சிறப்பினால் அஃறிணை உயர்தினை முடிபேற்றது. பொத்து : பொந்து என்பதின் வலித்தல்.(75)

76. **மாரிநாள் வந்த விருந்தும் மனம்பிறிதாய்க்**
**காரியத்திற் குன்றாக் கணிகையும் - வீரியத்து**
**மாற்றம் மறுத்துரைக்குஞ் சேவகனும் இம்மூவர்**
**போற்றற் கரியார் புரிந்து :**

**(இ-ள்.)** மாரிநாள் - மழைக்காலத்தில், வந்த விருந்தும் - வந்த விருந்தினரும், மனம் பிறிதாய் - தன் மனம் வேறொன்றிற் சென்றும், காரியத்தில் - பொருள் வருவாயினை மேற்கொள்ளுதலில், குன்றா - குறைவுபடாத, கணிகையும் - வேசையும்; வீரியத்து - (போரில் காட்டப் புகுந்த) வெற்றித் திறமையில், மாற்றம் - தலைவன் பகைவர்மேல் (அருளாற் கூறிய) சொல்லை,மறுத்து உரைக்கும் - மறுத்துச் சொல்லிச் செல்கின்ற, சேவகனும் வீரனும்; இ மூவர் - ஆகிய இம் மூவரும், புரிந்து - விரும்பி, போற்றற்கு - காத்தற்கு, அரியார் - அருமையானவ ராவர்; (எ-று.)

**(க-ரை.)** மழைக்காலத்தில் வந்த விருந்தினரும், காம மயக்கமில்லாத வேசையும், வெற்றியையே சிறப்பாகக் கருதும் வீரனும் பாதுகாத்தற்கு அரியவராவர்.

பிறிது : பிற என்னும் இடைச்சொல் லடியாகப் பிறந்த பெயர். சேவகன் : சேவகம் என்னும் பண்படியாகப் பிறந்த பெயர்.(76)

**77. கயவரைக் கையிகந்து வாழ்தல் நயவரை**
**நள்ளிருளுங் கைவிடா நட்டொழுகல் - தெள்ளி**
**வடுவான வாராமல் காத்தலிம் மூன்றும்**
**குடிமா சிலர்க்கே யுள.**

**(இ-ள்.)** கயவரை - கீழ்மக்களை, கையிகந்து - கைவிட்டு (சேராமல்,) வாழ்தல் - வாழ்தலும்; நயவரை - நீதியுடையவரை, நட்டு - நட்புச் செய்து, நள் இருளும் - நடு இரவிலும், கைவிடா - கைவிடாமல், ஒழுகல் - (அவருக்கு இணங்க) நடத்தலும்; தெள்ளி - ஆராய்ந்து, வடுவான- தனக்குப் பழிப்பான காரியங்கள், வாராமல் - வரவொட்டாமல், காத்தல் - காத்துக் கொள்ளுதலும்; இ மூன்றும் - ஆகிய இம் மூன்றும், குடி - குடிப்பிறப்பிலே, மாசு இலார்க்கே - குற்றம் இல்லாதவர்க்கே, உள - உண்டாகும்; (எ-று)

**(க-ரை.)** கீழ்மக்கள் கூட்டுறவை விட்டிருப்பதும், மேன் மக்களை எப்பொழுதும் பிரியாதிருப்பதும், தமக்குப் பழி வராமற் காப்பதும் நல்லோர்க்கு உரியன என்பது.

கயவர் : கய என்னும் பண்படியாகப் பிறந்த பெயர். நயம் : நீதி. நள் - நடுக்கம்; இப் பொருளில் நள்ளிரா அச்சத்தைத்தரும் நடு இரா எனக் கொள்க. இருள் : பண்பாகுபெயர். உம் : உயர்வு சிறப்பு. வடுவான : பலவின்பாற் பெயர்.(77)

**78. தூய்மை யுடைமை துணிவாம் தொழிலகற்றும்**
**வாய்மை யுடைமை வனப்பாகும் - தீமை**
**மனத்தினும் வாயினுஞ் சொல்லாமை மூன்றும்**
**தவத்தில் தருக்கினார் கோள்.**

**இ-ள்.)** தூய்மை உடைமை - மனத் தூய்மை யுடையராயிருத்தலும்; துணிவு ஆம் - (மெய்நூல்களாலே) துணியப் பட்ட, தொழில் - நற்செய்கையை, அகற்றும் - விரிக்கின்ற, வாய்மையுடைமை - உண்மையுடையவனாயிருத்தலும், வனப்பு ஆகும் - மங்கையருடைய அழகாகிய, தீமை - தீமையைத் தருவதனை, மனத்தினும் - மனத்தால் நினையாமையும்; வாயினும் - வாயால், சொல்லாமை - சொல்லாமையும்; மூன்றும் - ஆகிய இம் மூன்றும் , தவத்தில் - தவத்திலே, தருக்கினார் - செருக்கி நின்றவர்களுடைய, கோள் - கொள்கையாம்; (எ-று.)

**(க-ரை.)** தூய்மையும், வாய்மையாயிருப்பதுவும், தீமையை நினையாமலும் சொல்லாமலு மிருப்பதும் நற்றவமுடையார் செயல் என்பது.

துணிவு - துணியப்பட்டது : தொழிலாகுபெயர். அகற்றும் - அகல் என்னும் முதனிலை யடியாகப் பிறந்த பிறவினைப் பெயரெச்சம். தவத்தினரை நோக்கினமையின் வனப்பு பெண்ணின் வனப்புக்காயிற்று. மனத்தினாற் சொல்லாமையாவது இலக்கணையால் நினையாமையாம். தீமை - தீமையைத் தருவது - காரணம் காரியமாகச் சொல்லப்பட்டது.(78)

**79. பழியஞ்சான் வாழும் பசுவும் அழிவினால்**
**கொண்ட அருந்தவம் விட்டானும் - கொண்டிருந்**
**தில்லஞ்சி வாழும் எருதும் இவர்மூவர்**
**நெல்லுண்டல் நெஞ்சிற்கோர் நோய்.**

**(இ-ள்.)** பழி அஞ்சான் - (உலகம் பழிக்கும்) பழிப்புக்குப் பயப்படாமல், வாழும் - உயிர் வாழ்கின்ற, பசுவும் - பசுப்போல்வானும்; அழிவினால் - கேடு வந்த போது, கொண்ட - (தனக்கு உரித்தாகக்) கொண்ட, அருந்தவம் - அரிய தவத்தினை, விட்டானும் - விட்டவனும்; கொண்டிருந்தும் - (தனக்கு உட்பட்டவளாகக்) கொண்டிருந்தும், இல் - மனைவிக்கு, அஞ்சி - பயந்து, வாழும் - நடக்கின்ற, எருதும் - எருதுபோல்வானும்; இவர் மூவர் - ஆகிய இம் மூவரும், நெல் உண்டல் - (மக்கள் உண்ணக் கடவதாகிய) சோற்றை யுண்ணுதல், நெஞ்சிற்கு - (அறிவுடையார்) நெஞ்சுக்கு, ஓர் நோய் - ஒருநோயாம்; (எ-று.)

**(க-ரை.)** பழிக்கு கஞ்சாதவனும், கேடுற்றதென்று தவத்தை விட்டவனும், மனையாளுக்குப் பயந்து நடக்கும் கணவனும் உண்ணாது ஒழியத் தக்கவர் என்பது.

அஞ்சான் : முற்றெச்சம். பசு, எருது : உவமை யாகுபெயர்கள். நெல் அரிசிக்காகி; அது சோற்றுக்கு ஆயினமையின் இரு மடியாகுபெயர். 'நெல்லுண்ட நெஞ்சிற்கோர் நோய்' எனப் பாடங் கொள்ளின் நெல்லைத்தின்னநெஞ்சுக் குண்டாகும் துன்பத்தோடு ஒத்தவர் எனப் பொருள் கொள்க.(79)

**80. முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்**
**நிறையிலான் கொண்ட தவமும் - நிறையொழுக்கம்**
**தேற்றாதான் பெற்ற வனப்பும் இவை மூன்றும்**
**தூற்றின்கண் தூவிய வித்து.**

**(இ-ள்.)** முறை செய்யான் - முறையறிந்து செய்யமாட்டாதவன், பெற்ற - அடைந்த, தலைமையும் - தலைமைத் தன்மையும், நெஞ்சில் - மனத்தில், நிறை இலான் - உறுதிப்பாடு இல்லாதவன், கொண்ட - மேற்கொண்ட தவமும் - தவமும்; நிறை ஒழுக்கம் - குறைவற்ற ஒழுக்கத்தை, தேற்றாதான் - தெளிந்து நடவாதவன், பெற்ற வனப்பும் - பெற்ற அழகும்; இவை மூன்றும் - ஆகிய இம் மூன்றும், தூற்றின்கண் - புதலினிடத்து, தூவிய - விதைத்த, வித்து - விதையை யொக்கும்; (எ-று.)

**(க-ரை.)** முறை புரியமாட்டாதவன் தலைவனா யிருப்பதும், மனவலி யில்லாதவன் தவஞ் செய்வதும், நன்னடக்கை யில்லாதவன் அலுகும் வீண் என்பது.

நிறை இரண்டனுள் முன்னது தொழிற்பெயர். பின்னது காலங் கரந்த பெயரெச்சம், தேற்றாதான் : தன்வினை, வினையாலணையும் பெயர். தேறு : முதனிலை.